# ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை – 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து பாவனையில் காணப்படுகின்ற ரூபா 7,491,247 தொகையான 04 சொத்து விடயங்களை மீள்கணிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,900,000 பெறுமதியான மோட்டார் வாகனம் கணக்குக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதற்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் திறைசேரி வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 73,920,691 தொகையான மீதிகள் தொடர்பாக எந்த எழுத்து மூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த உத்தேசக் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2 வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 44.5 மில்லியன் மற்றும் ரூபா 193.2 மில்லியன் தொகையான நிதியத்திலிருந்து வங்கியினால் வழங்கப்பட்ட கடன் பணம் மற்றும் மீதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | |
| (i) IV ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு மற்றும் 2004 திசெம்பர் 24 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க முகாமைத்துவ உதவிச் சேவை பிரமாணக் கோவை | 2001 சனவரி 15 ஆந் திகதி தரவு நிரற்படுத்தும் செயற்படுத்துனர் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்காக தேவையான ஆகக் குறைந்த தகைமைகளை அடையாதிருந்த போதும் 2006 மே 09 ஆந் திகதி தொடக்கம் முகாமைத்துவ உதவியாளர் II வகுப்பிற்கு உள்ளீர்க்கப்பட்டு 12 சம்பள படிநிலைகள் உழைக்கப்பட்ட சம்பளத்தில் அமர்த்தி 2009 நவம்பர் 16 ஆந் திகதி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தார். |

| | | |
|---|---|---|
| | (ii) XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணைந்த படிக்காக தங்குமிடத்திற்காகவும் அதற்காக செய்யப்படுகின்ற செலவினங்களையும் மீளளிப்புச் செய்வற்காக செலுத்தப்படுகின்ற தொகையையே கருதுகின்றது. அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் பிரதேசக் கடமைகளில் ஈடுபடுகின்ற போது அதற்காக தங்குமிடம், உணவுகளுக்காக ரூபா 460,863 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குமேலதிகமாக அப்பிரயாணத்திற்காக ரூபா 86,857 தொகையான இணைந்த படிகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| | (iii) XXIV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு மற்றும் 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | சொத்துக்கள் பொறுப்பாக வைக்கப்பட்டு நிதி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொகையை தீர்ப்பதற்காக கடன் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பத்திருந்த உத்தியோகத்தருக்கு ரூபா 987,600 தொகையான ஆதனக் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | பல்வேறு பதவியணியினர் தரங்களில் கடமைகளின் பிரயாணங்களுக்காக ரூபா 10,500 தொகையான விசேட கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 1,283,017 பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,217,335 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,500,352 தொகையான வீழ்ச்சிக்காக வருமானம் ரூபா 11,301,520 தொகையினாலும் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் ரூபா 6,329,003 தொகையினாலும் குறைவடைந்தமையும், நிருவாகச் செலவினம் ரூபா 527,835 இனால் அதிகரித்தமையும் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகிய வாகனத்திற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 44,300 தொகையான நட்டஈட்டை அறவீடு செய்துகொள்வதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த உதவி உத்தேசத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்கும் வகையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தின் உடன்படிக்கைக் கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் அறவிடுவதற்கிருந்த ரூபா 124.3 மில்லியன் மற்றும் அதற்குரிய வட்டி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 நிதியங்களின் குறைவான பயன்பாடு

அதிகாரசபை முதலீடு செய்திருந்த ரூபா 70,500,000 தொகையினை மீளப்பெற்று சுயதொழில் மற்றும் புதிய வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக ரூபா 46,989,000 தொகை மீள முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 23,511,000 தொகை எவ்வித முதலீட்டிலும் ஈடுபடுத்தப்படாமல் 2½ மாதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,349,943 தொகை நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையில் 3 சதவீதத்திலிருந்து 3184 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் நிலவியமையால் ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வீடமைப்பு உதவிச் செயற்திட்டம்

(ஈ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்